# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

## ஆண்டு 7

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

## கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

நாம் அனைவரும் வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டிய முக்கியமான பண்புகள் கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு ஆகியனவாகும். இந்த மூன்று நற்பண்புகளையும் கடைப்பிடித்து வாழ்பவர்களே வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவார்கள்.

முதலில் கடமையைப் பற்றிப் பார்க்கலாம். கடமை என்பது பொறுப்புகளை சரியாகவும், சிறப்பாகவும் செய்வதாகும். எமக்கு நன்றாகப் படிப்பதும், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கூறும் அறிவுரைகளை பின்பற்றி நடப்பதும் கடமை ஆகும். ஆசிரியர்களுக்கான கடமை மாணவர்களுக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் கற்பிப்பது ஆகும்.பெற்றோர்களுக்கு பிள்ளைகளை நன்றாக வளர்ப்பது கடமை.

அடுத்து கண்ணியம் பற்றிப் பார்ப்போம். கண்ணியம் என்பது நல்லொழுக்கம் மற்றும் நற்பண்புகளை வெளிப்படுத்தும் பண்பாகும். அனைவருடனும் நாகரிகமாக பேசுதல்,அனைவரையும் மதித்து மரியாதையுடன் நடத்துதல், நேர்மையாக நடத்தல் ஆகியவற்றை இது குறிக்கிறது.

மூன்றாவது பண்பு கட்டுப்பாடு ஆகும். எமது சிந்தனைகளையும் செயல்களையும் கட்டுப்படுத்தும் திறன் இதுவாகும். அதாவது கோபம்,பேராசை,எதிர்மறையான எண்ணங்கள் போன்றவற்றை கட்டுப்படுத்தி, தவறான பாதையில் செல்லாமல், விதிமுறைகளை பின்பற்றி வாழும் முறைமை இதுவாகும் .

இந்த மூன்று பண்புகளை ஒவ்வொருவரும் பின்பற்றி வாழ்ந்தால் இந்த சமூகமே முன்னேற்றம் அடையும். எனவே நாங்கள் இவற்றை கடைப்பிடித்து அனைவரும் மதித்து போற்றும் வகையில் வாழ்வோம் எனக்கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி
வணக்கம்

திருமதி. அனிதா சிவசங்கர்




பேச்சுப் போட்டி எதிர்வரும் 06.06.2026 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.